இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 12 ஜூலை 2017 திகதியிடப்பட்ட ADB.org இல் உள்ள அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: சூரிய கூரைமேல் மின் உற்பத்தித் திட்டம்

| | | |
|---|---|---|
| திட்டத்தின் பெயர் | சூரிய கூரைமேல் மின் உற்பத்தித் திட்டம் | |
| திட்ட இலக்கம் | 50373-002 | |
| நாடு | இலங்கை | |
| திட்டத்தின் நிலை | முன்மொழியப்பட்டது | |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன்<br>தொழில்நுட்ப உதவி | |
| நிதியிடல் மூலம்/ தொகை | **கடன்: சூரிய கூரைமேல் மின் உற்பத்தித் திட்டம்** | |
| | சாதாரண மூலதன வளங்கள் | US$ 50.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | சுற்றுச்சூழல்சார் பேண்தகு வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி | |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுசார் தீர்வுகள்<br>கூட்டாண்மை<br>தனியார்த்துறை வளர்ச்சி | |
| துறை / உபதுறை | **சக்தி** – புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி - சூரியசக்தி | |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல | சில பால் மூலகங்கள் | |

| | |
|---|---|
| விவரணம் | சூரிய மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் சூரிய எரிசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான போராட்டத்தின் அமுலாக்கத்தினை துரிதப்படுத்துவதற்கும், நிறுவனம் சார் மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு கூரைமேல் சூரிய PV மின் உற்பத்தி வசதிகளை நிறுவுவதற்கு நிதியளிப்பதனை இயலச் செய்யும் ஒரு கடன் வசதியை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியைக் கோரியது. கூரைமேல் சூரிய கலம் நிறுவுவதனை மேம்படுத்துவதில் பெறுமதி சேர்க்கும் சூரிய புதுப்பிக்கத்தக்க வளங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் வணிக கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இந்தக் கடன் வசதி கூரைமேல் சூரிய மின்கல மின் உற்பத்தி மேம்பாட்டினைத் தூண்டுகின்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் தேவையான நிதியினை வழங்கும். இத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கூரைமேல் சூரிய மின்கல தொகுதிக்கான தொழில்நுட்ப வழிகாட்டிகள் மற்றும் தரநிலைகளை ஏற்படுத்தும்.<br><br>திட்டத்தின் வெளியீடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: (i) கூரைமேல் சூரிய மின் உற்பத்திக்கான கடன் நிதி அதிகரித்திருத்தல், (ii) கூரைமேல் சூரிய கலம் நிறுவும் சந்தை உட்கட்டமைப்பு மற்றும் வங்கியியல் துணைத் திட்ட வழி ஏற்படுத்தப்பட்டிருத்தல்; மற்றும் (iii) இலங்கை மத்திய வங்கி உட்பட பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் (PFIs), வணிக மற்றும் உள்நாட்டுத் துறை வாடிக்கையாளர்கள் ஆகிய பங்குதாரர்களின் திறன் மற்றும் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டிருத்தல்.<br><br>இந்த வெளியீடுகள் பின்வரும் விளைவுகளை விளைவிக்கும்: சுத்தமான பேண்தகு மின் உற்பத்தி மேம்படுத்தப்பட்டிருத்தல். இத் திட்டம் பின்வரும் தாக்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்: 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையில் சுத்தமானதும் நம்பகரமானதுமான மின் விநியோகத்திற்கான அணுகல் மேம்படுத்தப்பட்டிருத்தல் (ஒரு அறிவுசார் பொருளாதாரத்திற்கான இலங்கை எரிசக்தித் துறை அபிவிருத்தித் திட்டம் 2015 2025). |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபாயத்திற்கான தொடர்பும் | இலங்கை அதன் எரிசக்தித் துறையின் செயல்திறனை மேம்படுத்தியுள்ளதுடன் 1990 ஆம் ஆண்டு 29% உடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் ஒரு தேசிய மின்மயமாக்கல் விகிதமாக 98.5% அடைந்துள்ளது. எவ்வாறாயினும், விலையுயர்ந்த சுவட்டு எரிபொருள் எரிசக்தியில் அதிகம் தங்கியிருக்கும் நிலை தொடர்கின்றது. துறைசார் சவால்கள் குறைந்த செலவிலான ஏற்றுக்கொள்ளத்தக்க நம்பகரத்தன்மை உடைய மின்சக்திக்காக அதிகரித்துவரும் தேவையை ஈடுசெய்தல் மற்றும் நீண்டகால பேண்தகு தன்மையை அடைதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. உற்பத்திக் கலவையில் அனல் மின்சக்தியின் உயர்ந்த பங்கு (எண்ணெய் எரியூட்டப்பட்ட 17% மற்றும் நிலக்கரி எரியூட்டப்பட்ட 34% உற்பத்தி உள்ளடங்கலாக, 2015 ஆம் ஆண்டில் 51%) ஒரு அதிக செலவுத் தளத்தை உருவாக்கி வருவது நீண்ட காலத்தில் எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒரு சாத்தியமான மற்றும் நிலையான தீர்வாக இருக்காது. காற்று மற்றும் சூரிய சக்தி போன்ற, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் பல்வகைமை, நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும். இலங்கை அரசாங்கம் சுதேச எரிசக்தி வளங்களின் பேண்தகு வளர்ச்சியை உறுதிப்படுத்தி புதுப்பிக்கத்தக எரிசக்தி மூலங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது. அரசாங்கக் குறிக்கோள்கள், ஏனையவற்றுகளுக்கு இடையில், பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்தான எரிசக்தி விநியோகத்தின் பங்கினை 2020 ஆம் ஆண்டளவில் 20% ஆக அதிகரிப்பதனை உள்ளடக்குகின்றது. |

| | |
|---|---|
| | பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்தான மின்வலு உற்பத்தியில் 20% அதிகரிப்பு பாரம்பரிய நீர்மின்வலு உற்பத்தியின் 37% (2015) உடன் சேர்ந்து எதிர்காலத்தில் கணிசமானளவு பகுதி மின்சாரம் சுத்தமான எரிசக்தி மூலங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும். இலங்கையின் தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள், பச்சை வீட்டு வாயு வெளியிடுவதனை, வணிக ரீதியான வழக்கமான சூழலுக்கு எதிராக (அடிப்படை ஆண்டு 2013) எரிசக்தித் துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாடு மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டின் ஊடாக 20% (நிபந்தனையற்ற 4% மற்றும் நிபந்தனையுடனான 16%) இனால் குறைப்பதற்கு இலக்கு வைத்துள்ளது.<br><br>இந்த முன்மொழியப்பட்ட திட்டம் மின்சாரத்திற்கான அணுகலை விரிவாக்குதல், பேண்தகு சுத்தமான எரிசக்தி அபிவிருத்தி மற்றும் மின் உற்பத்திக் கலவையினை மேம்படுத்துதல் ஆகிய அரசாங்கத்தின் இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்யும். இது சூரிய சக்தியிலிருந்து சுத்தமான மின் உற்பத்தியை அதிகரிக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்கும். இத்திட்டமானது இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) இடைக்கால நாட்டு கூட்டாண்மை மூலோபாயத்துடன் இணங்கியுள்ளது. இது சுத்தமான மற்றும் நம்பகரமான மின்சாரத்திற்கான அணுகலை விரிவாக்குவதற்கு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டிற்கு ஊடுகடத்தல் மற்றும் விநியோக முதலீடுகளுக்கு ஆதரவளிப்பதில் கவனஞ்செலுத்திய ADB இன் முன்னைய தலையீடுகள் மேல் கட்டியெழுப்படுகின்றது. |
| தாக்கம் | 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையில் தூய மற்றும் நம்பகரமான மின்சார விநியோகத்திற்கான அணுகல் அதிகரிக்கப்பட்டிருத்தல் |
| விளைவு | மேம்படுத்தப்பட்ட தூய பேண்தகு மின் உற்பத்தி |
| வருவிளைவுகள் | சூரிய கூரைமேல் மின் உற்பத்திக்கு கடனளிப்பு நிதி அதிகரிக்கப்பட்டிருத்தல்.<br><br>கூரைமேல் சூரிய கல சந்தை உட்கட்டமைப்பு மற்றும் வங்கியியல் துணைத் திட்ட வாய்ப்புக்கள் மேம்படுத்தப்பட்டிருத்தல்<br><br>இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிதி நிறுவனங்கள், வணிக மற்றும் உள்நாட்டு துறை வாடிக்கையாளர்கள் உட்பட, பங்குதாரர்களின் கொள்திறன் மற்றும் விழிப்புணர்வு அதிகரித்திருத்தல் |
| பூகோளம்சார் அமைவிடம் | |

பாதுகாப்பு வகைகள்

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | FI-C |
| சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம் | FI-C |

சுதேச மக்கள் FI-C

சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்த அம்சங்களின் சுருக்கம்

சுற்றுச்சூழல் அம்சங்கள்

சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்

சுதேச மக்கள்

**பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

திட்ட வடிவமைப்பின் போது

திட்ட அமுலாக்கத்தின் போது

வியாபார வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | பொருந்தாது |
| கொள்வனவு | பொருந்தாது |

பொறுப்பான பணியாளர் குழாம்

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | காமுக்த்நொவ், முக்தோர் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம் | தெற்காசியத் திணைக்களம் |

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | சக்திப் பிரிவு, தெற்காசியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **நிதி அமைச்சு**<br>திறைசேரிக் கட்டடம்<br>கொழும்பு – 01<br>இலங்கை |

கால அட்டவணை

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 17 மே 2017 |
| உண்மை அறிதல் | 16 மே 2017 முதல் 26 மே 2017 வரை |
| MRM | 14 ஜூலை 2017 |
| ஒப்புதல் | - |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த PDS புதுப்பிப்பு | 23 மே 2017 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது கிடைக்கப்பெறும் போது சேர்த்துக் கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் (PDS) உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.